முச்சந்தி முரளி




Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 205

செவ்வாய்க்கிழமை
18 ஜூன் 2024






# ஒக்ரோபரில் தேர்தல்; வாக்குப்பெட்டிகள் தயார்!

## முழுவீச்சான பணியில் தேர்தல் ஆணைக்குழு

**கொழும்பு, ஜூன் 18**

**ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நிச்சயம் இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதற்கான வாக்குப் பெட்டிகளைத் தயார்படுத்து மாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.**

☞ 11

# சஜித் தரப்புடன் டலஸ், தயாசிறி

கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில்

☞ 11

# ஊடகவியலாளர் வீட்டில் தாக்குதல் நீதி கிடைக்காவிடின் போராட்டம்!

## ஊடக மையம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளரின் வீடொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட வில்லையாயின் வீதிகளில் இறங்கிப் போராட்டம்

☞ 11

# ரணிலின் பதவியை நீடிக்கும் திட்டமில்லை!

கொழும்பு, ஜூன் 18

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்தாண்டு களிலிருந்து ஆறு ஆண்டு

☞ 11

# வயோதிபப் பெண் மயங்கிச் சரிந்து சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

சமைத்துக் கொண்டிருந்தபோது மயங்கிச் சரிந்த வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார்.

அல்வாய் வடமேற்கு அல்வாயைச் சேர்ந்த

☞ 11

## உள்ளூராட்சி மன்றங்களின்

# தற்காலிகப் பணியாளர்கள் அனைவருக்கும் நியமனம்!

## பிரதமர் உறுதிமொழி



விரிவு :- பக். 11

# வடக்குக் கடலில் மீண்டும் சீனக் கடலட்டைப் பண்ணை

## தீவிரமாகப் போராட வேண்டிவரும் மீனவர்கள் பகிரங்கமான எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 18

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு, அரசியல் இருப்பினைத்தக்க வைத்துக்கொள்ளும் சூழ்ச்சியாக வடக்குக் கடலில் மீண்டும் சீன நாட்டு கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள் என - என்று வடமாகாண மீன

☞ 11

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்

# தூதரகத்தை முற்றுகையிட்டு யாழ்ப்பாணத்தில் இன்று போர்

யாழ்ப்பாணம், ஜூன் 18

இந்திய இழுவைமடிப் படகுகளின் அத்து மீறலைத் தடுத்துநிறுத்தி தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி, யாழ்ப்பாண மீனவர்கள் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தை முற்றுகை யிட்டு இன்று போராட்டம் மேற் கொள்ளவுள்ளனர்.

☞ 11






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



### நீதிமன்றத்தின் உத்தரவை

# நீதியமைச்சருடன் சேர்ந்து தூக்கிக் கடாசிய மைத்திரி

கொழும்பு, ஜூன் 18
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டவரும் தற்போதைய நீதி அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்சவும் நீதிமன்ற உத்தரவுக்கு முரணாக நடந்துகொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையில், இந்தத் தடையை மீறி விஜயதாஸ ராஜபக்ச சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக காலி கரந்தெனியவில் தனது பரப்புரையை ஆரம்பித்துள்ளார். அத்துடன் மைத்திரிபால சிறிசேன, சஜின்வாஸ்குணவர்த்தன ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இம்மாதம் 19ஆம் திகதி வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடாது எனவும் , நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இம்மாதம் 25ஆம் திகதி வரை சுதந்திரக் கட்சியின் கூட்டங்களில் கலந்துகொள்ளக்கூடாது என கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

## கடற்படைக்கு 458 பேர் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஜூன் 18
கடற்படையில் புதிதாக 458 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் சிப்பாய்களாக 274 ஆண்களும், 81 பெண்களும், தொண்டர் பணிக்காக 37 ஆண்களும், 66 பெண்களும் கடந்த வெள்ளிக்கிழமை சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். (எ-25-6)

## போராட்டங்களால் ஸ்தம்பிக்கவுள்ள நாடு

தற்போது இடம்பெற்று வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களுக்கு மேலதிகமாக வேறு சில தொழிற்சங்கங்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடஉள்ளன.
பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களுக்கு இந்த வருடத்தில் எந்தவித ஊதிய அதிகரிப்புகளும் வழங்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.
பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக மாணவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். மாணவர்கள் தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவோ புலமைப் பரிசில் களுக்கு விண்ணப்பிக்கவோ முடியாத நிலை காணப்படுகிறது. அத்துடன் புதிய மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளமுடியாத நிலையும் காணப்படுகிறது.
இதேவேளை தபால் ஊழியர்கள் இம்மாதம் 24ஆம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.அதிபர்– ஆசிரியர் சங்கங்களும் 26ஆம் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளன. மாணவர்களின் நலன் கருதி அதிபர் – ஆசிரியர் சங்கங்களை வேலைநிறுத்தம் செய்யவேண்டாமென பெற்றோர் ஆசிரியர் சங்கங்களை வலியுறுத்தவேண்டும் என்று கல்வியமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-6)

## தமிழர்களின் நம்பிக்கையை வென்ற அரசே எதிர்பார்ப்பு!

### அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 18
வடக்கு-கிழக்கு மக்களின் நம்பிக்கையை வென்ற அரசொன்றை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
லண்டனில் இலங்கையர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போது, வடக்கு - கிழக்கில் உள்ள வாக்குகளைப் பெறுவதற்கு வகுக்கப்பட்டுள்ள வியூகம் என்னவென்று எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தேர்தல் வெற்றிக்கு தமிழ்மக்களின் வாக்குகள் அவசியம் என்ற கோணத்தில்நாம்சிந்திக்கவில்லை, செயற்படவில்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையக மக்களின் நம்பிக்கையை வென்ற அரசொன்றை கட்டியெழுப்புவதே எமது இலக்கு.
தெற்கில் மட்டும் வெற்றிகிடைத்தால் வடக்கு மக்களுக்கு எம்மீது நம்பிக்கை இல்லை என்பதே தெரியவரும். எனவே, வடக்கு,கிழக்கு, தெற்கு மற்றும் மலையக மக்களின் ஒத்துழைப்பு எமக்கு அவசியம். அந்த ஒத்துழைப்புடன்தான் அரசு அமையவேண்டும் எனக் கருதுகின்றோம்.
வடக்கில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இளைஞர்கள் மத்தியில் எழுச்சி உள்ளது. கிழக்கில் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் ஆதரவு வலுத்துவருகின்றது- என்றார். (எ-44)



## தமிழ்ப் பொதுவேட்பாளர்; கிளிநொச்சியில் கூட்டம்

கொழும்பு, ஜூன் 18
ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பான பொதுக்கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.
தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பொது அமைப்புகளைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டனர். விவசாய அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்றனர் என்று கூறப்படுகின்றது.
தமிழ் மக்கள் பொதுச்சபை சார்பில் நிலாந்தன், பேராசிரியர் கணேசலிங்கம், ஜோதிலிங்கம், ரவீந்திரன் இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டது என்றும், இறுதியில் அந்த அமைப்புகள் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பதை ஏற்றுக்கொண்டன என்று தமிழ் மக்கள் பொதுச்சபை தெரிவித்துள்ளது. (எ-27)

## பாக்குநீரிணையைக் கடந்து மாணவன் சாதனை



கொழும்பு, ஜூன் 18
திருகோணமலையைச் சேர்ந்த மாணவன் கடந்த சனிக்கிழமை இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னாருக்கு இடையிலான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.
தரம் - 10 இல் கல்வி கற்கும் முஹம்மட் ஹஷன் ஸலாமா எனும் இஸ்லாமிய மாணவனே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார்.
பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையின் எட்டாவது நபராகவும், பாக்குநீரிணையை நீந்திக் கடந்த உலகின் முதலாவது இஸ்லாமிய நபராகவும் அவர் விளங்குகின்றார். (ச-இ)

## கிடப்பிலுள்ள வாகனங்கள் இனி ஏலத்தில் விற்பனை!

கொழும்பு, ஜூன் 18
நீதிமன்றங்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் தேங்கிக்கிடக்கும் வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
புதிய திருத்தத்தின் பிரகாரம் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்ட வாகனங்களை மூன்று மாதத்தின் பின்னர் ஏலத்தில் விற்பனைசெய்வதற்கு நீதிபதிக்கு அதிகாரமுண்டு. விற்பனை செய்து கிடைக்கும் பணம் வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்படும்.
வழக்கு விசாரணை முடிவில் உரிமையாளருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டால் வைப்பிலிடப்பட்ட பணம் வாகன உரிமையாளருக்கு வழங்கப்படும், தீர்ப்பு எதிராக இருந்தால் அந்தப் பணம் அரச கணக்கில் வைப்பிலிடப்படும். (எ-25-6)

# ரணிலை ஆதரிப்பதே பெரமுனவுக்கு நல்லது

### எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18
ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கும் முடிவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எடுக்கவேண்டும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தமது ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை பெயரிட்டால் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் வருவார்கள். சிறு கட்சிகளும் இணையும். அவ்வாறு பெயரை அறிவிக்காவிட்டால் மாற்றம் எதுவும் நடக்காது.
எனவே, ராஜபக்சக்கள் ஓர் அடி பின் வாங்கி, நாடு பற்றி யோசித்து முடிவை எடுக்கவேண்டும். ரணிலை வேட்பாளராக அறிவிப்பது நல்லது. அதேபோல மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் முழு வீச்சுடன் செயற்படவேண்டும்.
சிலவேளை ரணிலுக்குப் பதிலாக மற்றுமொரு வேட்பாளரை மொட்டுக் கட்சி நிறுத்தினால் அது சாதகமற்ற முடிவாகவே அமையும். மொட்டுக் கட்சி தோற்கும், ரணிலும் தோற்பார். சஜித் வெற்றி பெறுவார். ஜே.வி.பி. இரண்டாம் இடத்துக்கு வரக்கூடும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் குற்றங்களுக்கு புதியசட்டம் நடைமுறை

**கொழும்பு, ஜுன் 18**

**சிறுவர்களையோ, பெண்களையோ வார்த்தைகளாலோ அல்லது தொடர்பாடல் சாதனங்களாலோ பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினால் ஐந்து வருட சிறைத்தண்டனையுடன் அபராதமும் விதிப்பதற்கு புதிய பாலியல் துன்புறுத்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அபராதத்தொகை குற்றத்தைப்பொறுத்து அமையும். பாலியல் ரீதியான ஒளிப்படங்களையோ, காணொலிகளையோ மற்றும் குரல் பதிவுகள் போன்றவற்றை இணையத் தளங்களில் வெளியிடுதல், காட்சிப்படுத்தல், பகிர்தல், விநியோகித்தல், தவறான முறையில் குறுந்தகவல்களை அனுப்புதல் போன்றன இந்தப் பிரிவின் கீழ் குற்றங்களாக கருதப்படுகின்றன.

பெண்கள், சிறுவர்களுக்கு பாலியல் தொல்லைகள் அதிகரித்து வருவதாக அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ-25-6)

## வெளிநாட்டு கைக்குண்டுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜுன் 18

கேகாலை, ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிரிவடுன்ன பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் சந்தேக நபரொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்புக்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர்பல்வேறுதிருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ-இ)

## சீன நிறுவனத்துக்கு பாலியல் காணொலி விற்பனை

### நால்வர் கைது


கொழும்பு, ஜுன் 18

பாலியல் காட்சிகளை நேரலையாக ஒளிபரப்புச் செய்து சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்யும் பெரிய அளவிலான மோசடியை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

பிலியந்தலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பிலியந்தலை படகெத்தர பிரதேசத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்த இளம் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னர் கொள்ளுப்பிட்டியில் வசித்த குறித்த தம்பதியினர் கடந்த மார்ச் மாதம் இந்த வீட்டை வாடகைக்கு எடுத்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் சோதனையின் போது, மற்றொரு ஜோடி அந்த வீட்டில் இருந்து, பாலியல் காட்சியில் நேரடியாக ஈடுபட்டது கண்டறியப்பட்டது. கைதுசெய்யப்பட்ட இரு ஆண்களும், இரு பெண்களும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜுன் 18

ஹெரோய்ன் மற்றும் ஹேஷ் போதைப் பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களுடன் பஸ்ஸில் பயணித்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகும்புரவில் இருந்து காலி நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றை பொலிஸார் சோதனையிட்ட போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து ஹெரோயின், ஹேஷ் போதைப் பொருள், 57 கிராம் புகையிலை, 7 கைத்தொலைபேசிகள், ஒரு சிறிய கத்தி, நான்கு லைட்டர்கள், கம் போத்தல் மற்றும் நான்கு சிம் அட்டைகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-இ)

## போலிக் கடவுச்சீட்டில் லண்டன் சென்றவர் கைது

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி லண்டன் செல்ல முயன்ற திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய பெண் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் முகவர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று விமான நிலைய குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடவுச்சீட்டில் உள்ள புகைப்படம் அவருடையது அல்ல என்பதைக் கண்டறிந்ததால், அவர் தலைமை குடிவரவு அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து நடத்தப்பட்ட தொழில்நுட்பச் சோதனையில், மற்றொரு பெண்ணின் கடவுச்சீட்டில் இந்தப் பெண்ணின் தகவல்கள் பதிவு செய்து போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (எ-இ)

## சிறுமிகள் துஷ்பிரயோகம் பிக்கு கைது

இரு சிறுமிகளைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பௌத்த பிக்கு ஒருவர் தனமல்வில பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தபால்மூலம் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 12 மற்றும் 13 வயதான சிறுமிகள் மருத்துவப் பரிசோதனைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-இ)

## சட்டவிரோத சிகரெட்டுகள் மீட்பு!

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட 2 கோடி ரூபா பெறுமதியான சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மாளிகாவத்தை மற்றும் கொழும்பு -10 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 32 முதல் 45 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகள் நாடு முழுவதும் விநியோகிக்கத் தயாராக வைக்கப்பட்டிருந்தநிலையில், விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தினம் தெரியுமோ?

**எப்பவும் எல்லாரும் எங்களுக்குக் கீழதான் இருக்க வேணும் எண்டதுதான் தமிழாக்களின்ர எண்ணப்பாடு. தப்பித்தவறி ஆரும் முன்னேறப்பாக்கினம் எண்டால் ஏதாவது செய்து அவையைக் கீழ விழுத்துற வேலையெல்லாம், மாங்காய் விழுத்துறமாதிரி எங்கட ஆக்களுக்கு கைவந்த கலை. அதுவும் மற்றவையை மேய்க்கிற அரசாங்க உத்தியோகத்தில ஓராளை ஓராள் எப்ப விழுத்துவம் எண்டு சான்ஸ் பாத்துக்கொண்டு இருப்பினம். அந்தளவுக்கு அரசாங்க ஒப்பீஸ்களில ஒரே உள்குத்தும், கால்தடம் போட்டு விழுத்திறதும் சகஜமா நடக்கும். அதைமாதிரி தாங்கள் மேல போகாட்டியும் பரவாயில்லை, தங்களுக்குக் கீழ வேலை செய்யிற வேலையாக்கள் ஒரு சொட்டுக்கூட மேல எழும்பக்கூடாது எண்டதில கடும் கவனமா இருப்பினம்.**

**பிரதேச சபையளில சிற்றூழியர் தரத்தில இருக்கிறவையில, ஆரும் பட்டதாரியள் இருந்தால் அவையின்ர விவரத்தை அனுப்பச் சொல்லி ஒரு சுற்றுநிருபம் கிட்டடியில வந்தது. இப்பிடி விவரத்தை அரசாங்கம் ஏன் எடுக்குது எண்டதில எங்கட மேலதிகாரிமார் 'விவரமா' இருப்பினம். சிற்றூழியர்களில படிச்சு பட்டம் எடுத்திருந்தால், அவையின்ர படிப்புக்குப் பொருத்தமான பதவிக்கு அத்தி பூத்தாப் போல எப்பவாவது அரசாங்கம் நியமிக்கிறது. அப்பிடியொரு சான்ஸ் இப்ப வாய்ச்சிருக்குது. எலக்சன் வாறதால இப்பிடி சிற்றூழியர்களில பட்டதாரியா இருக்கிறவையை பதவி உயர்த்தினால் அவையின்ர வாக்கை எடுக்கலாம் எண்டது அரசாங்கத்தின்ர பிளான். ஆனால் இப்பிடியொரு சுற்றுநிருபமே வராதமாதிரி ஒண்டும் தெரியாத பச்சைப்பிள்ளை மாதிரி இருப்பமெண்டுறது அரசாங்க அதிகாரிகளின்ர பிளான். இப்பிடியொரு சுற்றுநிருபம் வந்திருக்கெண்டு எப்பிடியோ சில சிற்றூழியர்மார் மணந்து பிடிச்சுப் போட்டினம்.**

**'சேர், எங்களில பட்டதாரி ஆக்கள் இருந்தால் அவையின்ர விவரம் அனுப்பச் சொல்லி சுற்று நிருபம் வந்திருக்காமே. நீங்கள் எங்கட விவரம் அனுப்பிட்டீங்களோ?' எண்டு போய் அவை தங்கட பிரதேசசபை மேலதிகாரியிட்ட கேட்டிருக்கினம்.**

**'எலக்சனுக்காக உப்பிடி நிறையச் சொல்லுவாங்கள். ஒண்டும் செய்யாங்கள், அப்பிடி ஒரு சுற்று நிருபமே வரேலை. நீங்களும் அவங்கட புருடாவை நம்பிக்கொண்டிருக்கிறியளோ?' எண்டு சத்தியம் செய்யாக் குறையாச் சொல்லியிருக்கிறார் அந்த மேலதிகாரி.**

**இன்னொரு பிரதேசபை மேலதிகாரி, அப்பிடியொரு சுற்றுநிருபம் வந்ததெண்டு சொல்லியிருக்கிறார். இன்ரர் நெற்றில அந்தச் சுற்றுநிருபம் வந்ததாலதான் டக்கெண்டு அவர் உண்மையைச் சொல்லியிருக்க வேணும். ஆனால் அதுக்குள்ள அவர் 'அது ஆரம்ப சேவைப்பிரிவில இருக்கிற உத்தியோகத்தர்களுக்கு எண்டு போட்டிருக்கு. அப்ப அது உங்களுக்குப் பொருந்தாது. ஏனெண்டால் உத்தியோகத்தர் எண்டா அதிகாரி தரத்தில இருக்கிறவை தான்' எண்டு ஒரே போடாப் போட்டிருக்கிறார். ஆனால் அந்தச் சுற்று நிருபத்தில 'பி.எல்-I, பி.எல்-2, பி.எல்-3 எண்ட தரநிலை உத்தியோகத்தர்களின் விவரங்களை அனுப்பச்சொல்லி விவரமாப் போட்டிருக்கு. அந்தத் தரநிலையில இருக்கிறவை சிற்றூழியர்கள்தான். அதைக் கூட வாசிச்சு தெரியாதவைதான் மேலதிகாரிகளாம். அதைவிட உத்தியோகம் எண்டா எப்பிடி எல்லா ஒப்பீஸ் வேலையையும் குறிக்குதோ அதைமாதிரி உத்தியோகத்தர் எண்டால் ஒப்பீஸுகளில வேலை செய்யிற எல்லாரையும்தான் குறிக்கும். அதுவும் உந்த மேலதிகாரிமாருக்குத் தெரியாதோ? இல்லாட்டி தெரிஞ்ச மாதிரி காட்டிக்கொள்ளாமல் அமசடக்கமா இருக்கினமோ?**

**ஒருத்தன் வாழ்க்கையில முன்னேறுறதுக்கு தெய்வாதீனமா ஒரு சந்தர்ப்பம் கிடைச்சா அதுக்கு உதவிசெய்யோணுமே தவிர, இப்பிடி ஒளிச்சுப் பிடிச்சு விளையாடி அவையின்ர வாழ்க்கையில மண்ணள்ளிப் போடக்கூடாது கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் வழக்கம்போலவே காணப்படும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் சுபச் செலவு ஏற்படும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையின் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவீர்கள்.


**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மன உறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ளவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மீனம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.




# இலங்கைக்கு ஆறுதல் வெற்றி

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 38 ஆவது ஆட்டத்தில் நெதர்லாந்து அணியை 83 ஓட்டங்களால் வெற்றிகொண்டது இலங்கை அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 16.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 118 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இலங்கை அணி 83 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எ)

# மைத்திரியின் மோசமான சாதனை



*கொழும்பு, ஜூன் 18*

*மக்களின் மனித உரிமைகளை மீறியமைக்காக அதிக முறை தண்டிக்கப்பட்ட ஒரே ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன விளங்குகிறார் என பிரிட்டன் செய்தித் தளமொன்று தெரிவித்துள்ளது.*

*3 வழக்குகளில், இரண்டில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட அவருக்கு 103 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் என நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.*

*2018 ஆம் ஆண்டில், சட்டவிரோதமாக நாடாளுமன்றத்தை கலைத்த வழக்கு, ஈஸ்டர் தாக்குதல் வழக்கு மற்றும் ஜூட் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு மன்னிப்பு வழங்கிய வழக்கு ஆகிய மூன்று வழக்குகளில் இரண்டில் இந்த இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.* (ச)



# அயர்லாந்தை வீழ்த்தியது பாக்.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 36 ஆவது ஆட்டத்தில் அயர்லாந்து அணியை 3 விக்கெட்டுகளால் வெற்றிகொண்டது பாகிஸ்தான் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 18.5 பந்துப்பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. (எ)

# பங்களாதேஷிடம் வீழ்ந்தது நேபாளம்




ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 37 ஆவது ஆட்டத்தில் நேபாள அணியை 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பங்களாதேஷ் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நேபாள அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 19.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நேபாள அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 85 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பங்களாதேஷ் அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எ)

# நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம், ஜூன் 18

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த சனிக்கிழமை மாலை சாவகச்சேரி டச்சு வீதி ஐங்கரன் மணி மண்டபத்தில் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் தலைமையில் நடைபெற்றன.

தலைவராக திருமதி கீ.மகேஸ்வரி, உப தலைவராக திருமதி அ. சிறிசு சாந்தி, செயலாளராக திருமதி ரூ. தர்சிகா, உதவிச் செயலாளராக சி. அமிர்தகௌரி, பொருளாளராக க. சர்மிளா ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக எட்டுப் பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (சே)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# வடக்கில் வேகாத பருப்பு

சுற்றுலா, மீன்பிடி மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி என்பனவற்றின் மூலம் மன்னாரை விரைவாக அபிவிருத்தி செய்வது மாத்திரமல்லாது, நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கும் பங்களிப்புச்செய்ய வைக்கலாம் என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின்போதே ஜனாதிபதி ரணில் இந்தக் கூற்றுகளைத் தெரிவித்ததுடன், மன்னாரின் சுகாதாரம், குடிதண்ணீர், மருத்துவம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பதற்கும் 'அள்ள அள்ளக் குறையாத வார்த்தைகளால்' அவர் 'அட்சய' பாத்திரத்தை ஏந்தி நிற்பது போல மக்களை நம்பவைக்கவும் முயன்றிருக்கிறார்.

கோத்தாபய ராஜபக்ச, பதவியில் இருந்து அகற்றப்பட்டதன் பின்னர் ஆட்சிப்பீடம் ஏறிய ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கு வருவது இதுவொன்றும் முதல்முறையல்ல. ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஒருவர் வடக்குக்கு வருவது மிகச்சாதாரண சம்பவமாக தற்போது மாறியிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பின்னர் அத்தகைய ஓர் இலகுவான அணுகலைக் கொண்டுள்ள ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தன்னை நிலைநிறுத்தியிருப்பது வரவேற்கப்படவேண்டியதுதான். ஆனால், சுற்றுலா, மீன்பிடி இவ்விரண்டு துறைகளின் அபிவிருத்தி தொடர்பில் தொடர்ச்சியாகக் கருத்துத் தெரிவித்துவரும் ரணில், தன் செயற்றிட்டமாக எதைத்தான் கொண்டிருக்கின்றார் என்ற கேள்வி எழுவது இங்கு நியாயமாகின்றது. வடக்கிலிருந்து விவசாய, மீன்பிடி உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவேண்டும் என்ற ஜனாதிபதியின் எண்ணமும் - நோக்கமும் நல்லதுதான். ஆனால், அதற்குரிய பெருவிருப்பை நாட்டின் அரச இயந்திரம் ஆத்மார்த்தமாகக் கொண்டிருக்கின்றதா? என்ற கேள்விக்கான பதில்கள் இன்று தேடப்படவேண்டியவையாக இருக்கின்றன. ஏனெனில், விவசாயத்துறையில் வடக்கையும் உள்ளீர்த்து தன்னிறைவைக் காண்பது என்ற திட்டம் இப்போது பேசுபொருளாகும் ஒன்றல்ல. மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் காலத்திலும் இதே சாரப்பட பல்வேறு அறிக்கைகள் வெளிவந்தன. அதன் தொடர்ச்சியான வாய்ப்பந்தல் நடவடிக்கைகளைத்தான் ஜனாதிபதி ரணில் தற்போது மேற்கொண்டு வருகின்றார். அவ்வளவே!

ஆதலால், பொத்தாம் பொதுவாக அறிக்கைகளை வழங்கி நம்பிக்கைகளை விதைத்து பின்னர் கைகழுவிவிடும் கைங்கரியத்தை ரணில் அரசு முதலில் கைவிடவேண்டும். வடக்கு மக்கள் பல்வேறு விடயங்களால் அனுதினம் வதைபட்டுக் கொண்டிருக்கையில், தன் பங்குக்கு ஒரு கபட நாடகத்தை அரங்கேற்றுவது ரணிலுக்கு கொஞ்சமும் அழகல்ல. மாறாக அவர் உண்மையில் வடக்கை மையப்படுத்திய அபிவிருத்திக்குப் பெருவிருப்பம் கொண்டிருக்கின்றார் என்றால், அந்த விருப்பத்தை தன் நகர்வுகள் மூலமாகவும் ஒதுக்கீடுகள் மூலமாகவும் அவர் நிரூபிக்கவேண்டும். வடக்கின் பொருளாதாரத்தை 'இயற்கை அழிப்புக்கு அப்பாற்பட்டு' மேம்படுத்துவதற்கும், தங்களின் சுய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்குமான திட்டங்களைத்தான் ஜனாதிபதி என்ற வகையில் ரணிலிடம் மக்கள் எதிர்பார்க்கின்றார்களே அன்றி மாறாக வார்த்தை ஜாலங்கள் ஊடான போலி நம்பிக்கையூட்டல்களையல்ல. எல்லாவற்றையும் விட, பொதுமக்கள் அரச கட்டமைப்பிடம் திரும்பத்திரும்ப வலியுறுத்தும் வீதி அபிவிருத்தி, மருத்துவ - சுகாதாரத்துறைக்கான நியாயமான ஒதுக்கீடுகள் என்பவற்றையும், ஜனாதிபதி ரணில் நேரில் கலந்துகொள்ளும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்தான் பெற்றுக்கொள்ள முடிகின்றது என்றால், இது அரசாங்கக் கட்டமைப்பின் பலவீனத்தையும், அரசாங்க அதிகாரிகளின் முதுகெலும்பற்ற தன்மையையும்தான் பறைசாற்றுகின்றதே அன்றி வேறில்லை.

தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள் என்பது வேறு, தீர்க்கப்பட விரும்பாத பிரச்சினைகள் என்பதுவேறு. மன்னார் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில், 'தீர்வைக் கொடுத்ததாக' காண்பிக்கும் பல பிரச்சினைகள் ஜனாதிபதியின் நேரடிப் பிரசன்னத்தின்போது தீர்வைத் தேடவேண்டிய பிரச்சினைகளாகத் தெரியவில்லை. அதிகாரிகள் மட்டத்தில் தீர்வுகாணப்படவேண்டிய விடயங்களை ஊதிப்பெருப்பித்து, தன்னால் மட்டுமே அவற்றைத் தீர்க்க முடியுமென்ற ரணிலின் பருப்பு தென்னிலங்கையில் வேண்டுமானால் வேகக்கூடும், ஆனால் வடக்கில் ஒரு போதும் வேகப்போவதில்லை.






# சட்டவிரோத சொத்துகளை அரசுடைமையாக்கச் சட்டம்

**கொழும்பு, ஜூன் 18**

**போதைப்பொருள் கடத்தல் உட்பட சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தினூடாக வாங்கப்படும் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளை நீதிமன்ற உத்தரவின்றி கையகப்படுத்தும் அதிகாரம் கொண்ட சபையை நிறுவுவதற்கான சட்டமொன்றை விரைவில் இயற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

போதைப்பொருள் கடத்தல் மூலம் சட்டவிரோதமாக சம்பாதித்த பணத்தில் குவிக்கப்பட்டதாக நம்பப்படும் சில வீடுகள், வணிக கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சொத்துகளை கையகப்படுத்துவதற்கான பொறிமுறை இல்லை. உருவாக்கப்படும் புதிய சபை சொத்துகளை அரச நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாமா அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதா என்பதை முடிவு செய் யும். நீதிமன்ற உத்தரவுகளின் கீழ் கையகப்படுத்தப்பட்ட சொத்துகளை நிர்வகிப்பதும் குறித்த சபையின் பொறுப்பாகும். அவற்றின் வருமானத்தை திறைசேரியில் வைப்புச் செய்யவும் அதிகாரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-6)

## தே.எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 18

தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றினது விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் சுங்கவரி அதிகரிப்பே விலை அதிகரிப்புக்குக் காரணம் என தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இந்தியச் சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 18

இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது என்று சுற்றுலா அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்த மாதத்தின் 13 ஆம் திகதி வரை இந்தியாவில் இருந்து 12 ஆயிரத்து144 பேர் இலங்கை வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கட்டுமானப்பொருள் விலையில் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 18

சிமெந்து, கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களின் விலை வீழ்ச்சியடைந்து வருவதாக தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியுடன், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் பல காரணிகளால் கட்டுமானத்துறையின் பொருள்கள் மற்றும் மூலப்பொருள்களின் விலை வேகமாக உயர்வடைந்தது.

இந் நிலையில் தற்போது இத்துறையில் ஓரளவு மீட்சி ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## சமூக ஊடகங்களைக் கையாள்வதற்கு குழு

கொழும்பு, ஜூன் 18

பிரதான ஊடகங்களைத் தவிர்த்து சமூக ஊடகங்களைக் கையாள்வதற்காக 4 பேர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என கொழும்பின் ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது. இந்தக் குழு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து விடயங்களையும் கவனிக்கும் உச்ச அமைப்பாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நாளை

19.06.2024

**புதன்கிழமை**

**ஆனி - 05**

சுபநேரம் : 04.24 – 05.54

ராகுகாலம் : 11.54 –01.23

பிரதோஷ விரதம்

## நாளொரு நல்வார்த்தை

**ஒருவனுடைய இலட்சியம் இதுவென்று அறிந்து விட்டால் பின் அவனைப் பற்றி அறிதல் கடினமானதன்று.**

**-ஹேராம்ஸ்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலைகுறைப்பு தற்போதைக்கு சாத்தியமில்லை

## எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 18**

**உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைவடைந்துள்ள போதிலும் நாட்டில் எரிபொருள்களின் விலைகளை உடனடியாகக் குறைப்பது கடினமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் பிரகாரம் இலங்கையில் எரிபொருள் விலை குறைப்பு முறையாக மேற்கொள்ளப்படவேண்டும்.

சிங்கப்பூர் வர்த்தகக் குறியீட்டுக்கமைய சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. அங்கு தீர்மானிக்கப்படும் விலைகளுக்கு அமைய இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கப்படவேண்டும்.

நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 35 வீதமான மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுச் சுத்திகரிக்கப்படுவதால் உலக சந்தை விலைகளுக்கு அமைவாகச் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-25-66)



# மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி நிலையமும், நிலைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து மேற்படி கல்வி நிலையத்தில் கல்வி கற்று பல்கலைக்கழக பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளையும், க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு ஓய்வுநிலை அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் சுழிபுரம் கலைமகள் இலவசக் கல்வி நிலையத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார், சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை முன்னாள் அதிபர் ம.முகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக கல்வி நிலைய புலம்பெயர் ஒருங்கிணைப்பாளர் த.தேவகுமார், புலம்பெயர் தேச நலன்விரும்பி பு.கமலதாஸ், சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-25-125)

# 'செல்வா பிறீமியர் லீக்' வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

குடத்தனை வடக்கு செல்வா விளையாட்டுக்கழகம் நடத்தும் 'செல்வா பிறீமியர் லீக் -2024' துடுப்பாட்டப் போட்டித் தொடர் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

குடத்தனை வடக்கு செல்வா விளையாட்டுக்கழக வீரர்களை மட்டும் உள்வாங்கி அவர்களது விளையாட்டுத் திறனை வளப்படுத்துவதற்காக நான்கு அணிகளாக உருவாக்கப்பட்டு குறித்த 'செல்வா பிறீமியர் லீக் - 2024' நடத்தப்படுகின்றது.

இந்தத் தொடர் எட்டு ஓவர்கள் கொண்ட மென் பந்து துடுப்பாட்டப் போட்டியாக நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அணியிலும் 9 வீரர்கள் இடம்பெறும் வகையில் தொடர்ச்சியாக நான்கு அணிகளுக்கும் இடையில் போட்டிகள் நடத்தப்பட்டு முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட உள்ளன. (எ-100)

# மதுபான நிலையம் அமைக்க எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூன் 18

இயக்கச்சி மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கடற்றொழில் அமைச்சரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் அந்தப் பிரதேச சமூகமட்ட அமைப்புகள் கோரிக்கைக் கடிதம் ஒன்றை கையளித்துள்ளன. (எ-25-159)

# மோ.சைக்கிள் விபத்து ; ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் கிண்ணியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியின் வெள்ளை மணலில் இடம் பெற்றுள்ளது.

கிண்ணியா ஜித்தா நகரைச் சேர்ந்த முஹம்மது நசுறுல்லாஹ் (வயது-43) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கிண்ணியாவில் இருந்து குச்சவெளிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றவரும், திருகோணமலையிலிருந்து கிண்ணியா நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்தவருமே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். (எ-100)



மன்னார், மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி எம்.அஸீம் தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றன. (எ-25-213)



வ்ஹீத் ஜும்மா பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ஹஜ் பெருநாள் திடல் தொழுகை மௌலவி அஷ்ஷெய்க் ஏ.அறபாத் தலைமையில் வவுனியா, பட்டாணிச்சூர் 5 ஆம் ஒழுங்கை குடா வயல் திடலில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது. (எ-25-110)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

- யாழ் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்பு காணியும்
- யாழ் பிறவுண் வீதியில் 2 பரப்பு காணியும்
- யாழ் மின்சார நிலைய வீதியில் 4 1/2 பரப்பு காணியும்
- அச்சுவேலியில் 160 பரப்பு காணியும், கசுரினா பீச்சில் 160 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **077 723 2535**

## வேலை ஆட்கள் தேவை

இல: 194, யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதியிடுவதற்கு பெண்கள் தேவை மேலதிக விபரங்களுக்கு.

**076 640 3388**


OLD BOYS' ASSOCIATION
ST. PATRICK'S COLLEGE, JAFFNA

18th June 2024

## NOTICE
SPECIAL GENERAL MEETING


**Dear Life Members,**

**Notice is hereby given for a Special General Meeting of the Old Boys' Association of St. Patrick's College, Jaffna to be held on Sunday 23rd June 2024 at the Mathuram Square Hall at 4.30 pm.**

**Agenda.**
1. Prayer.
2. Briefing on the 175th Anniversary celebrations and arrangements of the college in 2025.
3. Discussion on the continuation of the existing office bearers up to Aug 2025 for the better arrangements of the 175th Anniversary.
4. Adjournment of the meeting

Thank you.
**J.Nitharshan,**
**Honorary General Secretary,**
**Old Boys' Association of St. Patrick's College, Jaffna.**

## கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு கிழக்கு

## நாகலிங்கம் தருமலிங்கம்

மனித வாழ்வின் மேலான ஆளுமைக் கூறுகளுடன் எல்லோர் மனங்களிலும் நிறைந்த ஒருவராக வாழ்ந்து, அமரத்துவம் பெற்றவர் எனது அருமை மைத்துனர் நாகலிங்கம் தருமலிங்கம் அவர்கள்.

எனது தங்கை பொன்றோஸை மணந்து, இறுதிவரை இல்வாழ்வை ரசிப்போடு வாழ்ந்து காட்டியவர்.

தனது பிள்ளைச் செல்வங்களை நன்னெறிப்படுத்தி, நல்வாழ்வில் செழிப்பாக்கியவர்.

இறை பக்தியும் பொது மக்கள் பக்தியுமாக, ஊரில் எல்லா இடங்களிலும் தெரிந்தவர்.

பணியாற்றிய இலங்கை போக்கு வரத்து சபையில், அது பொதுமக் களுக்கான சேவை என்ற கண்ணியத்தோடு மேம்பட்டவர்.

நகைச்சுவையான பேச்சு அவரின் வாழ்வில் இழைந்தோடியது. அது, எல்லோருடனுமான அவரது பரந்த நட்பின் ஆதாரமாய் இருந்தது.

வாழ்வின் நியதிகளையெல்லாம் வசமாக்கி வாழ்ந்தவர், அந்த வாழ்வின் மாற்றவொண்ணா நியதியை அடைந்துவிட்டார்.

அவரது ஆத்மா சாந்தியடைய, என்னப்பன் கோணேஸ்வர த்தான் தாழ்பணிந்து இறைஞ்சுகிறேன்.

**மைத்துனர்**
**கலைஞர் வேல் ஆனந்தன்**

(CS/...) J-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 . 04 . 1950



மறைவு
30 . 06 . 2023

கடந்த 30.06.2023 இறைபதமடைந்த

அமரர்

### கந்தையா இரத்தினசிங்கம்


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

அடைக்கலம் தோட்ட வீதி,
வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை. (CS/55410) J-1

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 03 . 1951



மறைவு
15 . 06 . 2024

### சின்னத்துரை நல்லதுரை (வவா)

மல்வத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நல்லதுரை கடந்த 15.06.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னமுத்து தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மரியதாஸ் - றோஸ்மலர் தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நியூமென்றஜித், நியூமென்சியா ஆகியோரின் அன்புத் தந்தையும், செலஸ்ரீனா, கிளிற்ரஸ் அன்டர்சன் ஆகியோரின் மாமனாரும், நிக்கோலஸ், ஆன்சி, கியாறா, கெனோலி, சியான்சா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர் களான அன்னமலர், நேசதுரை மற்றும் பவளமலர், லீலாமலர், மகிழ் இராஜதுரை, காலஞ்சென்ற புஸ்பமலர், மற்றும் ரட்ணதுரை, ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நேசமலர், யேசுதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.06.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து மல்வம் திருக்குடும்ப ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் வீதி,
மல்வம்.

தகவல்: **குடும்பத்தினர்**
**077 577 7431**
**077 654 4450**

(cs 85414) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபூசையும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம். ஜூன் 18

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டியின் பதினாறாவது ஆண்டு குருபூசை வைபவம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் ஆலயத் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் ச. முகுந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலைச் சேர்ந்த இராமசூரிய பிரபாகரக் குருக்கள் மற்றும் மாதகல் சாந்த நாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ இரத்தின ஐயர் மாணிக்கவாசகக் குருக்கள் ஆகிய மூத்த சிவாச்சாரியார்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-25-66)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் மாவட்டச் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும், யாழ் மாவட்டச் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் கல்வியங்காடு சட்டநாதர் சிவன் ஆலய மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

(ம-22-66)


# மருத்துவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 18

அம்பாறை, காரைதீவைச் சேர்ந்த மருத்துவரொருவர் பாணமை கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கல்முனை ஆதார மருத்துவமனையில் கடமை யாற்றியவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பாணமை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-555)





வடமாகாண பொலிஸ் பிரிவுகளுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி, யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ம-26)

# ரணிலையே பெரமுன ஆதரிக்கவேண்டும்!

தொலவத்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை நாட்டு மக்கள் ஏற்கின்றனர். எனவே, அவரை ஆதரிக்கும் முடிவையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எடுக்கவேண்டும் -இவ்வாறு அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பிரேம்நாத் சி. தொலவத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி உறுப்பினர், எனினும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டை மேலும் ஒரு தவணை ஆள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்கள் சிறப்பானவை, சர்வதேசம்கூட ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால் பொதுவேட்பாளராக ரணில்விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைக்கவேண்டியது கட்டாயம்.

ரணில் விக்கிரமசிங்கவை கடந்தகாலங்களில் விமர்சித்தோம். நாட்டின் நலன்கருதி, அவரின் முக்கியத்து வத்தை உணர்ந்து அவரின் வெற்றிக்காக இன்று பாடுபடுகின்றோம். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை கட்சி எடுக்கவேண்டும். அவ்வாறானதொரு முடிவை எடுக்கும் என நம்புகின்றோம் - என்றார்.

(எ-44)

# அறுபதாவது பிறந்தநாள் நினைவலைகள்



**அமரர் உயர்திரு. E.S.P. கணேசலிங்கம்**

உரிமையாளர் E.S. பேரம்பலம் அன் கம்பனி - கொழும்பு, யாழ்ப்பாணம்

**அன்னை மடியில்**
**18.06.1964**

**இறைவன் அடியில்**
**23.01.2017**

அன்பின் சிகரமே
வாழ்வின் ஒளிவிளக்கே
எம் குடும்பத்தலைவனே!
எம் வாழ்வின் வழிகாட்டிய தீபமே!
காற்றிலே கலந்து ஆண்டுகள் ஏழு ஆனாலும்
காலடி தழைக்கும் உம் நினைவுகள்
எம் மனத்திரையினுள்ளே முளையரும்பி கொடியாய்
மலர்ந்து மணம் வீசியபடி இன்னும் இருக்கிறீர்கள்
தோளிலே தெளித்த பாசத்தூறல்கள்...
வாழ்வில் ஆயிரமாயிரம் கண்கள் ஓரம்
கண்ணீர் துளிகளாய் நீங்கள்..
தீண்டும் பொருளெல்லாம்
நீங்கள் தானே அப்பா - மறைந்து
ஆண்டுகள் ஏழான போதும் சிறகிழந்து
தவிக்கிறோமே அப்பா
ஏழென்ன ஏழாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றும்
எம் நெஞ்சினில் நீங்காமல் நிலைத்திருக்கும்...

**இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் அப்பா!!**

**11, பெதெஸ்டா பிளேஸ்,**
**கொழும்பு -04**
**[illegible] பவனம்**
**[illegible]வளவு, காரைநகர்.**

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இலங்கை

கொழும்பு, ஜுன் 18

**இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம்கணிசமானஅளவுகுறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

ஏற்றுமதிப் பொருளாதாரம் மூலம் இலங்கைக்கு வரவழைக்கப்படும் டொலரை விட இறக்குமதிக்காகச் செலவிடப்படும் டொலரின் அளவு அதிகமாக உள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறைப் பேராசிரியர் அமிர்தலிங்கம் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

டொலர் அதிகளவில் வெளியேறுகின்றமை இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம் சரிவடைவதற்குப் பிரதான காரணம் என்றும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றின் பொருளாதார நல்வாழ்வைப் பேணுவது மிகவும் முக்கியமானது என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நிதிக் கையிருப்பை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான முக்கியமான வழிகளில் ஒன்று புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களின் வருமானமாகும். ஆகவே அதை அதிகரிப்பது அவசியமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறமையற்ற அல்லது குறைந்த திறன் கொண்ட தொழிலாளர்களுக்கு பதிலாக, திறமையான மற்றும் அதிக திறன் கொண்ட தொழிலாளர்களை வெளிநாட்டு வேலைகளுக்கு வழிநடத்தும் திட்டத்தில் அரசாங்கம் கவனம்செலுத்தவேண்டும்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)




# கட்சி தாவினார் பெரமுன எம்.பி.



கொழும்பு, ஜுன் 18

மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.பி. எஸ்.குமாரசிறி, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டின் போதே அவர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு இறுதிப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் காலப்பகுதியில் கட்சித் தாவல்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. இதனால் கொழும்பு அரசியல் சூடுபிடித்துள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஏ-இ)

# 4,500 சாரதிகளுக்கு அபராதம் விதிப்பு!

கொழும்பு, ஜுன் 18

கொழும்பில் பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராக்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட வீதி விதிமுறைகளை மீறிய வாகன சாரதிகள் 4 ஆயிரத்து 500க்கும் அதிகமானோருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் துஷார கம்லத் தெரிவித்தார்.

இந்தத் தவறுகள் தொடர்பில் அபராத ஆவணத்தை வாகன சாரதிகளுக்கு வழங்குவதற்காக போக்குவரத்துப் பிரிவின் கண்காணிப்புக் கமராக்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட காணொலிக் காட்சிகள் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

உள்ளூராட்சி மன்றங்களின் வள ஒதுக்கீட்டைக் கண்காணித்தல் மற்றும் முறையான வள ஒதுக்கீட்டுக்கு பங்களிப்புச் செய்தல் எனும் தொனிப்பொருளிலான மூன்று நாள் வதிவிட திறன்விருத்திப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட பயிற்றுவிப்பாளர்களின் அனுபவப் பகிர்வு யாழ்.புங்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ஏ-25-159)





# நடைபவனி

யாழ்ப்பாணம், ஜுன் 18

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் போதைப்பொருள் ஒழிப்பு நடைபவனி அதிபர் சி.பாலச்சந்திரன் தலைமையில் கொடிகாமம் சந்தையின் அருகாமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.லோகநாதன் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக போதைப்பொருள் தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான இ.தர்மேந்திரா, த.இராசகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஏ-25-159)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜுன் 18

புன்னாலைக்கட்டுவன் வடக்கு பூரணை புஸ்கலை சமேத ஹரிஹரபுத்ர ஐயனார் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறவுள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பால்க்காப்புச் சாத்தும் வைபவமும் நடைபெறுமெனத் தேவஸ்தானத்தினர் தெரிவித்தனர். (ஏ-25-66)

## தீ விபத்து

கொழும்பு, ஜுன் 18

கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் அமைந்துள்ள நிகழ்வு மண்டபமொன்றில் நேற்றுத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயணைப்புப் படையினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், சம்பவத்தில் எவரு[illegible] எனத் [illegible]

தீவிபத்து ஏற்பட்ட கட்டடத்தின் ஒரு பகுதி மட்டுமே சேதமடைந்துள்ளது. மின் கசிவு காரணமாக இந்த [illegible]டிருக்கலாம் என [illegible]படுகிறது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டமெதையும் வழங்காமல் பெர்குசன் உலக சாதனை!

## நியூஸிலாந்து அபார வெற்றி



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற பப்புவா நியூகினியாவுக்கு எதிரான ஆட்டத்தில், 4 ஓவர்களை வீசி ஓட்டமெதையும் வழங்காமல் உலக சாதனை படைத்துள்ளார் நியூஸிலாந்தின் வேகப்பந்து வீச்சாளரான பெர்குசன். இந்த ஆட்டத்தில் 7 விக்கெட்டுகளால் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பப்புவா நியூகினியா அணி 78 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. சாள்ஸ் அமினி அதிகபட்சமாக 17 ஓட்டங்களைப் பெற்றார். பெர்குசன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். தான் வீசிய 4 ஓவர்களில் எந்தவொரு ஓட்டத்தையும் பேர்குசன் வழங்கவில்லை. ரி-20 வரலாற்றில் இந்தச் சாதனையை நிலைநாட்டிய முதலாவது வீரராக பெர்குசன் பதிவானார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 12.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை அடைந்து வெற்றிபெற்றது.

கொன்வே 35 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். (ம)



## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 18

அமரர் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி தனது கலாநிதிப் பட்டத்துக்காக எழுதிய 'மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள்' எனும் ஆய்வு நூலின் வெளியீட்டு நிகழ்வு, ஐ. சிவலோகநாதன் தலைமையில் யாழ்.கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், எழுத்தாளர் கோப்பாய் சிவம் மற்றும் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் அ.ஆனந்தராசா, நூலாசிரியரின் சகோதரர் கா.ஞானபண்டிதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-25-66)

## சொற்பொழிவு

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து தலைமையுரையினை பரிபாலன சபைத் தலைவர் சி.தயாநாதன் ஆற்றவுள்ளார். 'சீகர மூர்த்தியான கந்தன்' எனும் விடயப்பொருளில் சைவப்புலவர் கா.கமலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ம-25)



## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 18

முன்னாள் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆறுமுகம் நடராஜன் எழுதிய 'பிறொம் தீ வில்லேஜ் ரூ தீ குலோபல் ஸ்டேஜ்ஏ மெமொய்ர்' (the Village to the Global Stage a memoir) எனும் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கிய ஆங்கில நூலின் வெளியீட்டு நிகழ்வு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பொன் விழாவின் ஓரங்கமாக யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நூலின் ஆய்வுரையை ஆற்றினார்.

மூத்த எழுத்தாளர் ஐ.சாந்தன் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (25-66)



முழங்காவில் மகா வித்தியாலயத்தில் புதிதாக கட்டப்பட்ட தொழில்நுட்ப பீட கட்டடத்தொகுதிக்கான பால் காய்ச்சும் நிகழ்வு அதிபர் ப.ஆனந்தராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (எ-25-159)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபயணம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலையின் சாரணர் அணியினர், பாண்ட் அணியினர், விளையாட்டு அணியினர், சுற்றாடல் முன்னோடிக் கழகத்தினர் மற்றும் புத்தாக்க கழகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-25-20)






ஜே/127 கிராமஅலுவலர் பிரிவின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, நல்லூர்ப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

நிகழ்வில் கிராமஅலுவலர், சமுர்த்தி அலுவலர் மற்றும் சனசமூக நிலையப் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு திருமஞ்சம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் திருமஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றது. (ம-22-66)

## வடக்குக்...

வர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கடலட்டைப் பண்ணைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தாவிடின் எதிர்வரும் நாள்களில் தீவிரமான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிவரும் என்றும் மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலே சட்டவிரோத கடற்றொழில்கள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக சீன நாட்டு கடலட்டைப் பண்ணைகளை ஜனாதிபதித் தேர்தலை முன்வைத்து அரசாங்கத் தரப்பில் இருந்து அரசியல் காரணங்களுக்காக மீண்டும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஆழமற்ற பரவைக் கடற்பரப்பில் சீன கடலட்டைப் பண்ணைகள் விதைக்கப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 24ஆம் திகதி வடக்குக்கு மீண்டும் விஜயம் மேற்கொள்ள இருப்பதாக அறிகின்றோம். ஜனாதிபதி அவர்களே, உங்களுடைய தேர்தல் அல்லது அரசியல் இருப்புக்காக கடற்றொழில் சமூகமாகிய எங்களையும் எங்களது கடலையும் நீங்கள் அழிக்காதீர்கள். அரசியல் ஆதாயத்துக்காகக் குறிப்பிட்ட கடற்றொழில் சமூகத்தைத் தூண்டிவிட்டு சீன நாட்டுக் கடலட்டைப் பண்ணைகளை வடக்குக் கடலில் மீண்டும் கொண்டுவருவதற்கான முயற்சியில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஈடுபட்டு வருகின்றமையை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். எமது எதிர்ப்பினையும் மீறி இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் கடந்த காலத்தைவிட, தீவிரமாக கடற்றொழில் சமூகம் அதற்கு எதிராகப் போராடும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடக்கின் அபிவிருத்திக்கோ, முதலீட்டுக்கோ நாங்கள் தடையானவர்கள் அல்ல. ஆனால், உங்களுடைய (ரணிலின்) ஆட்சிக்காலத்தில்தான் வடக்குக் கடலிலே சட்டவிரோதமான செயற்பாடுகளும் முறையற்ற முதலீடுகளும் நடைபெறுகின்றன. குறிப்பாக ஜனாதிபதிக்குக் கீழே செயற்படுகின்ற நாரா மற்றும் நெக்ரா நிறுவனங்கள் வடக்குக் கடலில் எத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றன? ஆய்வுகளின் அடிப்படையில்தான் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். தொடர்ச்சியாக பரீட்சார்த்தமாக அல்லது தழுவல் என்ற அடிப்படையிலேயே ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படாமல் இவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை அனுமதிப்பதன் மூலம் எங்களுடைய இருப்பையும், கடலையும் ஜனாதிபதி ரணில் அழித்து வருகிறார்.

வடக்கு மாகாணத்திலே குறிப்பாக தீவகப் பிரதேசங்களிலே கடலட்டைப் பண்ணை கள் அதிகமாக இருக்கின்றன. இதனால் அந்தப்பகுதியில் உள்ள மீனவர்களது வாழ்வாதாரத்திலே பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உண்பதற்குக் கூட மீனில்லாத நிலை. தகரத்திலே அடைக்கப்பட்டு வரும் ரின் மீனையும் நெத்தலிக் கருவாட்டையும் உண்ணும் நிலையைத்தான் இன்று ஜனாதிபதி ஏற்படுத்தியிருக்கின்றார் - என்றனர். (அ-ம-100)

## ரணிலின்...

களாக அதிகரிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது என வெளியாகும் தகவல்களை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் வெளிவரும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை. தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் அவ்வாறு செய்யமுடியாது. தேர்தலைப் பிற்போடுவது தொடர்பில் அரசாங்கத்துக்குள் எவ்விதப் பேச்சும் நடத்தப்படவில்லை. தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறு செய்யவும் முடியாது. உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்படும். புதிய அரசமைப்புப் பற்றிக் கதைப்பதற்குத் தற்போது நேரம் இல்லை. 4 தேர்தல்கள் நடத்தப்படவேண்டியுள்ள நிலையில், அரசமைப்புத் தொடர்பான பேச்சுகளுக்கு நேரம் இல்லை என்பதே உண்மை - என்றார்.

அத்துடன் பொதுஜன பெரமுன, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாக வெளியான தகவல்களைதான் ஊடகங்கள் வாயிலாகவே அறிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## ஒக்ரோபரில்...

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டவாறு நடைபெறும். அதற்கான ஏற்பாடுகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. வாக்குச்சாவடி விவரங்கள் கிடைத்தவுடன், வாக்குப்பெட்டிகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அதனை விரைவில் சரிசெய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை - தேர்தலை இலக்காகக் கொண்டு, தேர்தல் அதிகாரிகள் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்படும். உள்ளூராட்சித் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் அடுத்தவாரம் கலந்துரையாடவுள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் அநேகமாக செப்ரெம்பர் 17ஆம் திகதிக்குப் பின்னரும் ஒக்ரோபர் 16ஆம் திகதிக்கு முன்னருமான காலப்பகுதியில் நடைபெறும் - என்றார். (அ-ம)

## வயோதிபப்...

சுகிர்தலீலா ஸ்ரீரஞ்சன் (வயது-67) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சமைத்துக் கொண்டிருந்த மேற்படி வயோதிபப் பெண் தலைசுற்றுவதாகத் தெரிவித்து உறங்கியுள்ளார். சில நிமிடங்களில் அவர் மூச்சற்று இருப்பதைப் பார்த்த குடும்பத்தினர் அவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். (அ-ம-100)

## தற்காலிகப்...

உள்ளூராட்சிமன்றங்களில் தற்காலிக ஊழியர்களாகப் பணிபுரியும் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றநிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு பொருளாதார ரீதியாகச் சிக்கலை எதிர்கொண்டுள்ளபோதிலும் நாங்கள் பல நியமனங்களை வழங்கியுள்ளோம். இன்று இன்னொரு விடயத்தையும் கூற விரும்புகின்றேன். உள்ளூராட்சிமன்றங்களில் பணிபுரியும் அனைத்து தற்காலிக ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும். அதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மெதுவாக மீண்டு வருகிறது. எனினும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் கஷ்டங்களை நாங்கள் நன்கு அறிவோம். அதன் காரணமாகவே தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ-ம-6)

## சஜித்...

விரைவில் இணையக்கூடும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருபகுதியினர் எம்முடன் இணைந்துள்ளனர். ஏனைய எம்.பி.க்களுடனும் கலந்துரையாடல் இடம்பெற்றுவருகின்றது. எதிர்காலத்தில் அவர்கள் கூட்டணியில் இணைவார்கள் என நம்புகின்றோம்.

அதேபோல தயாசிறி ஜயசேகரவும் சிறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளார். அந்தத் தரப்புகளுடன் அவர் எம்முடன் இணைவார் என நம்புகின்றோம். ஒக்ரோபர் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கின்றோம்" - என்றார். (அ-ம-44)

## ஊடகவியலாளர்...

நடத்தப்படும் என்று யாழ்ப்பாண ஊடக அமையம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த சுதந்திர ஊடக இயக்கத் தலைவர்களுடனான சந்திப்பின்போது, அச்சுவேலியில் உள்ள ஊடகவியலாளர் த.பிரதீபனின் வீட்டில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து கொழும்புதிரும்பிய சுதந்திர ஊடக இயக்கத்தினர் இது தொடர்பில் உயர்மட்ட பேச்சுகளை முன்னெடுத்திருந்தனர்.

உயர்மட்ட சந்திப்புகளில் தாக்குதலின் உண்மைத் தன்மையினைக் கண்டறிய கால அவகாசம் கோரப்பட்டுள்ளதுடன் நேரடியாக விசாரணைக்குழுவொன்றை தனித்து நியமிப்பது தொடர்பிலும் பரிசீலிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, உண்மைக்குற்றவாளிகளை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்றும், இல்லையேல் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தப் பின்நிற்கப் போவதில்லை என்றும் யாழ்ப்பாண ஊடக அமையம் அறிவித்துள்ளது. (அ-ம-20)

## தூதரகத்தை...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்த விடயத்தை அவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்தி எமக்கு விரைவில் தீர்வினைப் பெற்றுத்தராவிடில் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டுப் போராடுவோம் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி, சக்தியம்மன் வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-9)



சர்வதேச புகைத்தல், மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சும், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த 'நண்பா போதைக்கு புகைத்லுக்கு முற்றுப்புள்ளி வைப்போம் வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டியெழுப்புவோம்' என்ற தலைப்பிலான செயற்றிட்டம் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (எ-25-159)

## தந்தை, தாய் உயிரிழந்த நிலையில் அவர்களின் ஒரே மகளும் உயிரிழப்பு

### யாழில் சோகம்!



யாழ்ப்பாணம், ஜுன் 18

தந்தை, தாய் ஆகியோர் சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்திருந்த் நிலையில் தனது அம்மம்மாவுடன் வாழ்ந்து வந்த ஒரே மகளான இளம் பெண்ணும் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண் சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். இராசசூரியர் பவதாரணி (வயது-22) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-66)

## ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் பேருந்து நிலையத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 18

ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக நாளை புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி இரவு அவருடைய வீட்டின் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இதையடுத்தே இந்தப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தாக்குதல் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படாதமை ஊடகத்துறை மீதான அச்சுறுத்தலாகவே பார்க்கப்பட வேண்டியுள்ளதாகவும், ஆதலால், இந்தப் போராட்டம் தவிர்க்கப்பட முடியாதது என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-26)




'போதைப்பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய பழைய மாணவர்களால்,பாரதிபுரம் சூசைப்பிள்ளையார் சந்தியிலிருந்து பாடசாலை மைதானம் வரை கவனவீர்ப்புப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (எ-25-113)


### பகுதி நேர/முழுநேர வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி சந்தைப்பகுதியிலுள்ள கடை ஒன்றிற்கு Tea,Shorteats,Cool Drinks விநியோகம் செய்வதற்கு பகுதி நேர/முழுநேர வேலையாட்கள் தேவை. அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (CS/771) J-1

**076 294 3552**

### வீடு வாடகைக்கு

கொழும்புத்துறை மேற்கு விபுலானந்தர் வீதியில் அமைந்துள்ள மூன்று அறைகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு: **075 913 7308**

### தவறிவிட்டது

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அடம்பனில் இருந்து முழங்காவில் வரையான வீதியில் பயணப்பொதியொன்று தவறிவிட்டது. கண்டெடுத்து ஒப்படைப்பவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: **077 563 2944**

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்தி அருகாமையில்**
**A-9 வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

**Golden Real Estate (Pvt) Ltd.** (CS/772) J-1

**077-029 4164**
**077-329 4130**
**077-294 1521**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 08 • 06 • 1966

விண்ணில் 19 • 05 • 2024



### சின்னத்தம்பி ஜெயரூபன்

(பிரதி அதிபர், யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்)

கதைகள் பேசி களிப்பூட்டி
கனவுகள் பல கூறி
காத்திருந்த வேளைதனில்
காலன் அவன் பொறுக்காமல் தன்
காலடியில் எடுத்துக் கொண்டான்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இனுவில் மேற்கு,
இனுவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/55416) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.